Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No. CC .NO. 186/2023
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No. 1, Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சண்முகம் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | வேலு | தொழில் | வியாபாரம் |
| கிராமம் | சின்னமூக்கனூர் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 53 |
| எதிரிகள் ஆஜர் | | | 1, 2 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 28th day of July 2025

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**அ.சா.1 திரு.சண்முகம் முதல் விசாரணை**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் மளிகை கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 2ம் எதிரி எனக்கு மாமா உறவு முறை ஆவார். 1ம் எதிரி 2ம் எதிரியின் மகன் ஆவார். எங்களுக்கும் எதிரிகளுக்கும் ஏற்கனவே சொத்து சம்பந்தமாக பிரச்சனை இருந்து வந்தது. கடந்த 16.05.2023 அன்று எனது பக்கத்து நிலமான ஜெய என்பவரின் நிலத்தை அளப்பதற்காக காலை 09.45 மணிக்கு நில அளவையர் வந்தார். அப்போது நான் நில அளவையரிடம் பேசிக்கொண்டிருந்தேன். அப்போது ஆஜர் எதிரிகள் அங்கு வந்தார்கள். அவர்களுக்கும் எனக்கும் இடையே சொத்து சம்பந்தமாக வாய் தகராறு ஏற்பட்டு, அப்போது ஆஜர் எதிரிகள் என்னை பார்த்து தேவிடியா பையா என்று அசிங்கமாகதிட்டி, ஆஜர் எதிரிகள் இருவரும் என்னை அடித்தார்கள். அதன்பின்பு ஆஜர் 2ம் எதிரி ஒரு கல்லால் என் உதட்டின் மீதும், என் இடது தாடையிலும் தாக்கினார்.

2. அதன்பின்னிட்டு மீண்டும் ஆஜர் எதிரிகள் என்னை அசிங்கமாக திட்டி, என்னை கொலை செய்யாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்தார்கள். எதிரிகள் எனனை தாக்கியதால் எனக்கு வாயிலும் தாடையிலும் காயம் ஏற்பட்டது. அருகில் இருந்த லோகேஷ் மற்றும் மணி ஆகியோர் என்னை திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில சிகிச்சைக்கு சேர்த்தார்கள். சம்பவம் நடந்து 2 நாட்கள் கழித்து நான் காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையோப்பம் என்னுடைதுான். (**அந்த புகார் அசா.ஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) 2ம் எதிரி என்னை தாக்க பயன்படுத்தப்பட்ட கல் தான் தற்போது என்னிடம் காட்டப்படும் கல் ஆகும். (**அந்த கல் அசாபொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

நான் 9ம் வகுப்பு வரை படித்துள்ளேன். சம்பவம் நடந்தவுடன் நான் நேராக அரசு மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன் என்றால் சரிதான். அங்கு இரண்டு நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். நான் சிகிச்சையில் இருந்தபோது ஜோலார்பேடடை போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் அசா.ஆ.1 புகாரில் உள்ள கையொப்பம் நான் மருத்துவமயில் இட்டது என்றால் சரிதான். ஜெயா என்பவர் எனக்கு மாமா உறவு முறை ஆகும். ரவியும் ஜெயாவும் சகோதரர்கள் என்றால் சரிதான். எனக்கும் எதிரிகளுக்கும் பிரச்சனை இருந்து வரும் சொத்தானது சின்ன மூக்கனூர் கிராமத்தில் அமைந்துள்ளது. அன்று நிலத்தை அளப்பதற்கு வந்த நில அளவையரின் பெயர் எனக்கு தெரியாது. சம்பவம் நடந்த போது சம்பவ இடத்தில் சுமார் 10-15 நபர்கள் இருந்தார்கள். தகவல் தெரிந்த பின்பு தான் லோகேஷ் மற்றும் மணி சம்பவ இடத்திற்கு வந்து என்னை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்றால் சரிதான். எனக்கும் எதிரிகளுக்கும் வாய் தகராறு ஏற்பட்டபோது அருகில் இருந்தவர்கள் விலக்கி விட்டார்கள் என்றால் சரிதான். நான் தான் எதிரிகளை கல்லாலும் கட்டடையாலும் தாக்கினோம் என்றால் சரியல்ல. எதிரிகள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற விவரம் எனக்கு தெரியும். சம்பவமானது எதிரிகளுக்கு பாத்தியப்பட்ட நிலத்தில் நடந்தது

என்றால் ்சரிதான். போலீசார் விசாரித்தபோதும் எதிரகளுக்கு பாத்தியப்பட்ட இடத்தில் தான் சம்பவம் நடந்ததாக தெரிவித்துள்ளேன். லோகேஷ் மற்றும் மணிகண்டன் ஆகியோர் என் மாமாவின் மகன்கள் ஆவார்கள். போலீசார் என்னை மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். அதன்பின்னிட்டு போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் கூறுவது போல் எதிரிகள் என்னை தாக்கவில்லை என்றால் சரியல்ல. எனக்கும் எதிரகளுக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்ட போது நான் தானாக விழுந்து ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரகள் மீது பொய்யாக புகார் அளித்து அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் ்அளிக்கிறேன் எ்னறால் சரியல்ல. நடக்காத சம்பவத்தை நடந்ததாக தெரவித்து அரசு மருத்துவமனையில் பொய்யாக புகார் வாக்குமூலம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எதிரிகளுக்கு சொந்தமாக நிலத்தில் அவர்கள் சுவாதீனத்தில் இருக்கக்கூடாது என்பதற்காகவும் நான் சுவாதீனம் அடையவேண்டும் என்பதற்காகவும் பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No. CC .NO. 186/2023
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No. 2, Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செல்வி | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | சண்முகம் | தொழில் | வியாபாரம் |
| கிராமம் | சின்னமூக்கனூர் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 40 |
| எதிரிகள் ஆஜர் | | | 1, 2 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 28th day of July 2025

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**அ.சா.2 திருமதி செல்வி முதல் விசாரணை**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் வியாபாரம் செய்து வருகிறேன். அசா1 எனது கணவர். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எனது உறவினர்கள். கடந்த 16.05.2023 அன்று ஜெயா என்பவர் எங்களுக்கு பக்கத்து நிலத்தை அளப்பதற்காக நில அளவையருடன் வந்திருந்தார். நான் அப்போது கடையில் இருந்தேன். என் கணவர் வந்து ஜெயாவின் நிலத்தை அளந்த போது சற்று அதிகமாக இருந்ததால் நிலத்தை அளப்பதற்கு எதிரிகள் பிரச்சனை செய்து எதிரிகள் தன்னை தாக்கியதாக என்னிடம் வந்து கூறினார். என் கணவருக்கு இடது பக்க முகத்திலும் உதட்டிலும் காயம் ஏற்பட்டிருந்து. பின்பு 21.05.2023 அன்று சம்பவ இடத்திற்கு வந்து போலீசார் என்னை விசாரித்தனர். மேலும் போலீசார் என் முன்பு மாதிரி வரைபடம், பார்வை மகசர் தயார் செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் 2வது கையொப்பம் என்னுடையதுதான். **(அந்த பார்வை மகசர் என்னால் அசா.ஆ2 ஆக**

**குறியீடு செய்யப்படுகிறது.)** மேலும் எதிரிகள் என் கணவரை தாக்க பயன்படுத்திய கல்லை போலீசார் எங்கள முன்னிலையில் கைப்பறறி கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் 2வது கையொப்பம் என்னுடையதுதான். (**அந்த கைப்பற்றுதல் மகசர் என்னால் அசா.ஆ3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

என் கடைக்கும் நில அளவையர் அளந்த இடத்திற்கும் சுமார் 100 அடி தூரம் இருக்கும். என்ன காரணத்திற்காக கையொப்பம் செய்துள்ளேன் என்று எனக்கு தெரியாது என்றால் பிரச்சனை நடந்தது சம்பந்தமாக கையொப்பம் செய்துள்ளேன். கைப்பற்றுதல் மகசர் மற்றும் பார்வை மகசரில் உள்ள விவரங்கள் தெரியுமா என்றால் பிரச்சனை நடந்தது குறித்த விவரங்கள் உள்ளன. சம்பவம் நடந்த இடமானது எதிரிகளுக்கு பாத்தியப்பட்ட இடம் என்றால் சரிதான். மற்றொரு கையொப்பம் எதற்காக இட்டேன் என்றால் புகார் அளித்ததற்காக இட்டேன். போலீசாரே அசா.பொ1யை கைப்ற்றினார்கள் என்றாலும் என் முன்னிலையில் கைப்பற்றவில்லை என்றும் தற்போது வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. என்னிடம் போலிசார் கையோப்பம் பெற்றபோது சுமார் 10 நபர்கள் இருந்தார்கள். அந்த 10 நபர்களிடமும் கையொப்பம் பெற்றார்களா என்றால் இல்லை. நான் கையொப்பம் இட்ட பின்பு போலீசார் வேறு யாரிடமும் கையொப்பம் பெறவில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் டசெய்து விட்டு தறபோது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.